திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மூட்டைப் பூச்சி மருந்து செறிந்த அளவில் இருந்தால், அது மனிதர்களின் உயிருக்குப் பாதகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதை விற்பனை செய்யக் கூடாது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறார்கள். இந்த மூட்டைப் பூச்சி மருந்துகளில் கிட்டத்தட்ட 20 பாட்டில்கள் அல்லது 30 பாட்டில்கள் சாப்பிட்டால் கூட, மனிதர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படுத்தாத மருந்துகளும் இருக்கின்றன. அதே சமயத்தில் ஒரு பாட்டில் சாப்பிட்டாலும், ஆபத்து ஏற்படுத்தும் மருந்துகளும் இருக்கின்றன. ஆனால் ஒரே சமயத்தில் எல்லா மருந்துகளையும், செறிந்த அளவில் இருக்கிற காரணத்தால், மனிதர்களுக்கு ஆபத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும், விற்பனை செய்யக் கூடாது என்று அரசு சொல்லியது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆரம்பத்தில் வணிகர்கள் தரப்பிலிருந்து இப்படிப்பட்ட மறுப்புகள் நிறைய வந்திருக்கின்றன. ஒருசில வணிகர்களுடைய லாப நோக்கத்திற்காக அடிக்கடி தற்கொலைக்கு மக்கள் ஆளாகிற நிகழ்ச்சிகளுக்கு மூட்டைப் பூச்சி மருந்து பயன்படுத்தப்படுகிற சூழ்நிலையிலிருந்து மக்களைத் தடுக்க வேண்டுமென்ற கொள்கையிலிருந்து பின்வாங்குவது நல்லதல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்டத்தை முன்பு குஜராத் மாநிலத்தில் போட்டுவிட்டு, அங்கே உள்ள வணிகர்கள் சொல்லிய பிறகு, அவர்கள் கூற்றில் நியாயம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு, இப்போது அதை மாற்றிவிட்டார்கள் என்பது இந்த அரசிற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாமும் புரிந்துகொள்கின்ற நேரத்தில் மாற்றிவிடலாம்.

'B' Class Practitioners in Siddha

*12. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that 'B' class Practitioners in Siddha are working on regular and contract basis in a number of Government Hospitals ;

(*b*) if so, the names of those institutions ; and

(*c*) whether there is any proposal with the Governm nt to employ B.I.M. graduates who are unemployed in these institutions ?

சித்த மருத்துவம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

28th November 1970]

(அ) சித்த மருத்துவத்தில் 'பி' வகுப்பைச் சேர்ந்த மருத்துவர்கள், அரசினர் மருத்துவ மனைகள் பலவற்றில் முறையாகவும் ஒப்பந்த அடிப்படையிலும் பணியாற்றி வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய மருத்துவ நிறுவனங்களின் பெயர்கள் யாவை ?

(உ) வேலையில்லாமலுள்ள பி.ஐ.எம். பட்டதாரிகளை இத்தகைய நிறுவனங்களில் வேலையிலமர்த்த அரசிடம் ஏதேனும் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) (1) திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசுத் தலைமை மருத்துவமனை. (2) மருத்துவமனை, தலைமைச் செயலகம், சென்னை.

(உ) 'பி' வகுப்பு மருத்துவர்கள் நீக்கப்பட்டு அவ்விடங்களில் 'ஏ' வகுப்பில் பதிவு செய்யப்பட்ட பி.ஐ.எம். பட்டதாரிகள் வேலைக்கமர்த்தப்படுவர்.

College of Indian System of Medicine, Palayamkottai

*13. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) the number of applications received by the College of Indian System of Medicine, Palayamkottai for admission during the academic year 1970-71 ; and

(*b*) among them, the number of candidates selected ?

பாளையங்கோட்டை, இந்திய முறை மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970—71-ஆம் கல்வியாண்டில், பாளையங்கோட்டை, இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சேருவதற்காக அந்தக் கல்லூரிக்கு வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) அவர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) 1970—71-ம் கல்வி ஆண்டில், பாளையங்கோட்டையிலுள்ள அரசினரின் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படும் பி.ஐ.எம். பட்டப் படிப்பிற்கு 143 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

(இ) இப்பட்டப் படிப்பிற்கு 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.